UNDELIVERED ISSUES

Please re-address all undelivered issues of the Morning Star to:- The Manager, "Morning Star", Vaddukoddai.

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. QB/59/300/26/82*

Established: 1841 : A Christian Weekly : Published Every Friday

Vol. 144 JAFFNA, FRIDAY, 12 & 19th OCTOBER, 1984 No. 41 & 42

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

*Subscription*

Inland: Rs. 50/- per year.

FOR ADVERTISEMENTS

*Apply to:*

The Manager, 'Morning Star', Vaddukoddai.

## Tamil Speech Competition

Jampettah Methodist Church annexed the "*David Nalliah" Challenge Shield* when they emerged overall winners in the Finals of the Tamil Speech Competition for Sunday School children that was conducted by the Christian Tamil Drama and Music Society on October 6, at the James Mather Hall, Moor Road, Wellawatte.

The Rev. Kenneth Fernando, Director, Ecumenical Institute and Mrs. Fernando who were the chief guests distributed the awards.

Jaffna News in Brief

## A Modest Forward Step

In an effort to ensure that terrorists inflicted land mine attacks on the security forces are minismised or eliminated the authorities have taken a decision to suspend forthwith repairs to roads used by the military and police in five northern districts is a news report which *Tribune* of 6-10-84 has quoted in its *"Sri Lanka Chronicle"* from a news report of the DN (Daily News) of September 28, 1984.

But the CDN of 8-10-84 in its front page states under the bold caption "*We wont abandan development in North—Lalith*":—

"It must be clearly understood that we are only not moving ahead with projects that we cannot do because of terrorfsm ......The Minister made the point that where funds are diverted for defence purposes, there is a development spin-off "*like better roads for instance*"

This is good news. But we do hope that the largest plus in the contemporary South - North relations would not be 'development' which allows only "the crumbs that fall".

R

## The Plantation Sector in Sri Lanka

The three Free Crops - tea, rubber and coconut constitute 41 per cent of the cultivated areas and contribute 50 per cent of the expert earnings. These crops also generate 14 per cent of the budgetary revenue.

But there has been a steady decline since 1978. While the export earningss in 1978 was 73 per cent in 1933, it was only 50 per cent. The estimate export earnings for 1984 is 54 per cent.

Regarding budgetary revenue, the earning in 1978 was 40 per cent but in 1984, the expected earning is 18 per cent.

Twentytwo per cent of the national workingforce is employed in the plantation industries Prior to 1965, the plantation crops contributed more than 90 per cent of the export earnings of the country, according to a Project Identification Report of the National Planning Division of the Ministry of Finance.

## Dr. S. Durai Raja Singam of Malaysia

Dr. S. Durai Raja Singam of Malaysia celebrated his 80th birth day on the 29th September. This will be of some interest to his several friends in Jaffna and Sri Lanka.

Mr. Durai Raja Singam was an Old Boy of Jaffna College from 1923 — 26. He was a student in the London Matriculation and later London Intermediate-in-Arts classes. In an article to the Centenary Publication of the Jaffna College Miscellany on "*Those were the Days*", he has acknowledged his indebtedness to Rev. M. H. Harrison, Minnie Hastings Harrison and Mr. J. V. Chelliah for the inspiration they gave him for his writings, the first of which was "*How's that Umpire*" after his visit to India to see Gandhiji.

He also refers to Mr. Handy Perinpanayagam whom he describes as "a student's idol" It was the success of Handy Perinpanayagam and Lyman Kulathungam at the London Inter Arts Examination that made his mother to send him to Jaffna College from Parameshwara College.

At the "Sham Indian National Congress" staged by the *Brotherhood*, (Mr. J. V. Chelliah was Patron of this Senior Literary Association), Mr. Durai Raja Singham acted the part of *Rajaji* and Mr. Subramaniam (orator) the part of *Gandhiji* (for, according to Mr. Durai Raja Singam, orator Subramaniam "resembled Gandhiji most of all". He (Mr. Durai Raja Singham) was complimented on his performance by the Chif Guest, Principal Veerasingham of Manipay Hindu College, for his portrayal of Rajaji, "even without his dark spectacles".

Dr. Durai Raja Singam is one of the most wellknown authors and collector of books. He has been helpful in building up several libraries around the world, particularly the Jaffna Public Library, the Jaffna University Library and the Daniel Poor Library of Jaffna College.

He has several worthy publications to his credit and has been a specialist on Dr. Ananda Coomaraswamy's publications and works.

Our heartiest congratulations to him and we wish him many more useful years of service in this very learned field.

His address is — House - 7
Section 11 - 3,
Petaling Jaya.
Malaysia.

## THE 37TH ANNUAL FESTIVAL OF CAROL SINGING

BY THE YOUTH OF THE NORTH

AT St. John's College. Jaffna

ON Saturday 10th November 1984 at 9.30 a. m.

*Admission by Programme.* *Please inform others.*

St. John's College,
Jaffna.

## First Death Anniversary

The first death Anniversary of the Rt. Rev. C. L. Wickremasinghe falls on October 23 this year. Bishop Wickremasinghe was consecrated the Second Bishop of the Kurunegalle Diocese, at Calcutta by the Metropolitan of India, Pakistan, Burma and Ceylon who at that time was Bishop Lakdasa de Mel who was the first Bishop of Kurunegalla.

"*The Ceylon Churchman*", Volume LXXXII No. 1, 1984 is a Special Number in Thanksgiving for the life of and work of Bishop Lakshman Wickremasinghe, Bishop of Kurunegalle from December 16, 1962 to October 23, 1984. The Number includes tributes from 6 Bishops — the Rt. Rev. S W. Fernando, Bishop of Colombo, the Rt. Rev. D. J. Ambalavanar, the Bishop of the Jaffna Diocese of the CSI, Rt. Rev. S. Kulandran, former Bishop of the JDCSI. the Rt. Rev. David Young Bishop of Ripon, the Rt. Rev. Sundar Clarke, Bishop of Madras (CSI) and the Rt. Rev. Andrew Kumarage, the Bishop of Kurunagala who succeeded Bishop Lakshman Wickremasinghe). It also includes tributes from four Ministers of the Church and seven laymen

The tributes have been prefaced by Bishops Lakshman's Pastoral Letter which he gave the Diocese a few weeks before his death

What the Bishop said in his 'Letter" about "a political solution" remains to this day the crucial issue of our time:—

"The deadlock at present between the different Sinhala leaders and between the Sinhaleadership and Tamil leadership is disheartening, A concensus among the Sinhala leaders is essential. This concensus must have the support of the leading monks in all the Nikayas. The urgent demands of our national crisis must overcome personal, party and petty interests. We must pray for and support those who are trying to build convergence in the midst of divergence."

## Jaffna College

Wanted trained teachers for the Primary School (Grades 1 — 5). Teachers with experience will be given preferance. Apply on forms available at the College Office on or before the 17th November, 1984.

A. Kadirgamar,
Principal.

Jaffna College,
Vaddukoddai.

## Oberammegau

There were 88 performances from May to September this year of the world famous Passion Play which since 1634 has been staged every ten years in the little Bavarian village of *Oberammegau* in Germany in fulfilment of a vow. Since 1634, the *Village under the Cross* as Oberammegau was known has been spared from plague which in 1633 devastated its dwindling population.

1984 is the 350th Anniversary of the Passion Play. Hans Meir, the wood carver was the Producer and on him devolved the responsibility of recruiting a cast of 1200 from a village population of 4850, which did not include, according to Report "two sheep, one donkey one horse and several doves from a neighbouring village".

The stage erected during this Jubilee year was 45 metres in width and was reputed to be the largest open-air stage in the world. (For the crowd scenes before Pontius Pilate, nearly 800 people were brought on the stage).

The duration of the Play was 5½ hours with a three hour break for lunch Strength of personal character and sound physique are criteria for the selection for the role of Christ. The 20 minute crucifixion scene would demand from the actor physical prowess and endurance of a high order.

# உதயதாரகை

**UTHAYATHARAKAI**

Estd. 1841.

[ வெள்ளிதோறும் வெளிவருவது
கிறிஸ்தவ வார இதழ்.]

'' நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம் ''

மலர் 144 ] 12, 19 – 10 – 1984 [ இதழ் 41, 42


## நமது பங்களிப்பு

நாடு குமுறுகின்றது. ஜாதிக்கு விரோதமாய் ஜாதி எழும் புகின்றது அடுத்த நிமிஷம் நமக்கு என்ன நடக்கும் என்று தெரியாத அவலநிலை. பிறநாடுகளுக்கு ஓடிவிடுவோம் என்று அங்கலாய்க்கின்றனர் சிலர். சொந்தமண்ணே நல்லது என் கின்றனர் வேறுசிலர். சிலர் போராட்டத்தில் இறங்கியுள்ள னர். மற்றவர்கள் சாத்விகம் பேசுகின்றனர்.

நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பிறந்த காலத்தி லும் பாலஸ்தீனு தேசம் இவ்வாறு குமுறிக்கொண்டிருந்தது. உரோமரின் அடக்குமுறையின் கீழ் யூதக்மகள் தத்தளித் துக் கொண்டிருந்தனர். நாடு விடுதலையடைய வேண்டும் என்று பலர் ஆசைப்பட்டனர். சுதந்திரப் பித்தராய் வாலி பர்கள் அலைந்தனர்.

அந்த நேரத்திலும் இஸ்ரவேல் மக்கள் பலவாறு பிரிந்து நின்று போராடினுர்கள். உரோமரோடு ஒத்துழைப்பதே சாலச்சிறந்தது என்றனர் சதுசேயர். உரோமரை எதிர்க்க வேண்டுமென்றனர் பரிசேயர். எசனேயர் உரோமரின் ஊடுருவலினுல் தமது தூய்மையான ஆவிக்குரிய வாழ்வு கெட் டுப் போகிறதென்று, வனந்தரங்களிலும், கடற்கரையோரங் களிலும் துறவிகளாக வாழ்ந்தார்கள். செலோத்தேயர் என் னும் இன்னெரு வாலிப இயக்கத்தினர் வாளேந்திப் போர் புரிவதே தக்கது என்று சொல்லி தமது அணியை வளர்த்து வந்தனர்.

இந்த நேரத்திலே இந்தக் கூட்டங்கள் ஒன்றையும் சாராத ஒரு பக்திமான்கள் அணியும் பாலஸ்தீனு தேசத்திலே செயற்பட்டு வந்தது. தீர்க்கதரிசி அன்னுள், சிமியோன், மரியாள் போன்றவர்கள் தமது நாட்டின் இன்னல்கள் தீர வேண்டும் தமது நாட்டின் மக்கள் சந்தோஷத்துடனும் மன நிறைவுடனும் வாழவேண்டும் என்றும் ஓயாது ஜெபம் பண் ணிக்கொண்டிருந்தார்கள். தமது வேதனைகளிலிருந்து தம்மை விடுவிகக ஒரு மேசியா வருவார் என்று காத்திருந் தார்கள் அவர்களுடைய ஆசைகள் வீண்போகவில்லை, அவர் கள் எதிர்பார்த்தபடியே மேசியா மரியாளின் வயிற்றிற் பிறந்தார்.

இன்று நம்மை வாட்டும் வேதனைகள் இறைவன் அரு ளால் நீங்குவனவன்றி நிலைப்பனவல்ல வென்பது நம்மெல்லா ருக்குந்தெரியும், ஆனுல் ஆண்டவரின் அடியார்களாகிய நாம் செய்ய வேண்டியது என்ன?

"பல்லாண்டு பல்லாண்டு பாலைவனம் போலிருந்து
எல்லாம் இழந்துவிட்ட இஸ்ரவேலை வாழவைப்பாய்"

என்று வேண்டுதல் செய்வதேயாகும்.

---

## வேதத்தை வாசித்தல் எங்ஙனம்

சென்னைப் பேராயத்தின் முன்னுள்
பேராயர் டாக்டர் தாவீது செல்லப்பா அவர்கள்

வேதத்துக்கு உரிய இடத்தை மிகைப்படுத்தவும் கூடாது; குறைத்துவிடவும் கூடாது. அதனை அணுக வேண்டிய முறையைத் தெளிவாகக் காட்டுகிறுர்கள். முன்னுள் சென்னைப் பேராயர் அவர் கள். ஒவ்வொருவரும் வாசித்துப் பயன்பெற முடிந்த தனிப் பெரு மொழிகள் இங்குள்ளன.

— ஆசிரியர்

திருச்சபையின் அஸ்திபாரம் வேதம் அல்ல. திருச்சபையின் அஸ்திபாரம் இயேசுகிஸ்துவே. ஆனுல் கடவுளுடைய வார்த் தையை வேதம் தன்னுள் கொண் டிருக்கிறது. ஆகவே திருச்சபை யின் போதனையானது வேதத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். ஒரு கிறிஸ்தவனு டைய வாழ்க்கை வேததினுல் மாததிரம் அல்ல, சாக்கிரமெந்து களாலும் வளமூட்டப்படுகிறது. சிலசபைகள்வே த்தை அசட்டை செய்துவிட்டுச் சாக்கிரமெந்து கள் மாத்திரம் கவனம் செலுத் துகின்றன. தென்னிந்தியத் திருச் சபையானது வேத சாக்கிரமெந் துகள் ஆகிய இரண்டையும் முக் கியமானவைகளாகக் கொள்ளு கின்றது. ஆனுல், திருவசனம் சாக்கிரமெந்து ஆகிய இரண்டில் ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றிருந்தால் நாம் திருவசனத்தைத்தான் தெரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் சாக்கிரமெந்துகளுக்குரிய ஆதா ரம் திருவசனந்தான்.

தென்னிந்தியத் திருச்சபை வேததத்தைத் தன் அடிக்களனுகக் கொண்டதாகும். அதாவது, வேதத்திலிருந்து திட்டவட்டமாக நிரூபித்துக் காட்ட முடியாத எந்த ஒரு மூலக் கொள்கையையும் இங்குப் போதிக்க முடியாது. தனியங்கத்தினர் சில குறிப்பிட்ட பக்திநியமமான அபிப்பிராயம் உடையவர்களாக இருக்கலாம். ஆனுல் அவைகள் இரட்சிப்புக்கு அவசிய மானவைகள் என்று போதிக்க முடியாது. நாம் வேதத்திலிருந்து நழுவிச் சென்று விடுகிறோம்.

### வெளிப்படுத்திய நெறி

வேதத்தைச் சரியாகப்புரிந்து கொள்ள வேண்டுமாயின், கட வுள் தம்மைக் கொஞ்சம் கொஞ் சமாகவே உலகிற்கு வெளிப்படுத் தியருளினுர் என்ற உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டும் கட வுள் திடீரென்று ஒரே தடவை யில் தம்மை வெளிப்படுத்தாமல், மக்கள் அறிந்துகொள்ளும் ஆற் றலுக்கு ஏற்ப மெல்ல மெல்லவே தம்மை வெளிப்படுத்தியருளினுர். அப்படி அவர் வெளிப்படுத்திய தையே எப்பொழுதும் எல்லாரும் புரிந்து கொண்டார்கள் என்று சொல்வதற்கில்லை. விவிலியம் ஒரு நாள் போன்றது. ஒரு நாளா னது இருட்டிலே ஆரம்பமாகின் றது. அதன்பின் சூரியன் உதய மாகின்றது அதன்பின் சூரியன் சிறிது சிறிதாக உயர்ந்து, நடுப் பகலில் அதன் பேரொளி முழுவ தும் காணப்படுகிறது. அதனைப் போலவே, வேதத்திலும், கடவு ளைப்பற்றிய மங்கலான கருத்து களோடு ஆரம்பிக்கிறோம். பின்பு சிறிது சிறிதாகக் கடவுளின் முழுத் தன்மையையும் நிறைவாகக் கிறிஸ்துவில் காணுகிறோம், ஆனுல் கடவுள் மாறுகிறவர் அல்லர். அவர் என்றென்றும் மாருதவரா கவே இருக்கிருர், அவரைப் பற்றிய நம்முடைய கருத்துகள் தாம் மாறுகின்றன.

(வளரும்)

---

## மல்வத்தில் ஒரு திருச்சபை மன்றம்

உடுவிலைச் சேர்ந்த மல்வத்தில் ஒரு சிற்ருலயமும் பணிமனையும் சென்ற சனிக்கிழமை (22-9-84) அத்தியட்சர் அம்பலவாணர் அவர்களினுலே திறந்துவைக்கப் பட்டது.

இவ் வைபவம் மாலை மூன்று மணிக்கு ஆரம்பமாகியது. உடு வில் மகளிர் கல்லூரியின் வாத்தி யக் கோஷ்டி தலைமை தாங்கச் சபையார் கீதங்களைப் பாடிக் கொண்டு தேவாலய வளவிற் புகுந்தனர். பிரதிஷ்டை ஆரா தனை பேராயர். அம்பலவாணர் அவர்களினுலே நடாத்தப் பட்டது. வேதப்பாடங்கள் வண. எஸ். மனேபவன். செல்வி. சுதந் திரா துரைசிங்கம் ஆகியோ ரினுலே வாசிக்கப்பட்டன அத்தி யட்சர் ஜெபம் செய்து திருச்சபை மன்றைத் திறந்து வைத்தார். ஆலயத்தில் விளக்குகள் ஏற்றப் பட்டு ஆராதனை நடாத்தப் பட்டது.

இதனைத் தொடர்ந்து ஒரு பகிரங்கக் கூட்டம் தேவாலய வளவில் நடாத்தப்பட்டது. அத்தி யட்சர் அம்பலவாணர் தலைமை யுரை நிகழ்த்தினுர். மல்வம் சபை யார் பேச வந்த பிரமுகர்கட்கு மாலை அணிவித்து உபசாரம் செய்தனர் உடுவிற் பகுதி உதவி அரசாங்க அதிபர், திரு. எஸ், ஜீவானந்தம் (சென் ஜோன்ஸ் கல்லூரி) வண. S. N. சுகுணுனந் தன், ஆகியோர் பேசினர். சடா சங்கத்தின் சுவிசேட அலுவலர் வண. மனேபவன் நன்றி தெரி வித்துப் பேசினுர். கூட்டத்திற்கு வந்த அனைவருக்கும் மல்வம் சபை யார் தேனீர் விருந்தளித்தனர்.

## அத்தியட்சர் குலேந்திரனின் புதிய நூல்

அத்தியட்சர் சபாபதி குலேந் திரன் அவர்கள் தமது புதிய நூலை ஆக்குவதில் ஈடுபட்டிருக்கின்றனர் ஆங்கிலத்தில் இதுவரை காலமும் எழுதிய கட்டுரைகளினதும், கடி தங்களினதும், இரங்கல் உரைகளி னதும் தொகுப்பாக இது அமை யும் என்று தெரிகிறது. மத, சமூக ஆய்வுக்கான கிறிஸ்தவ நிறுவனம் (C. I. S. R. S.) இதனை வெளியிட இருக்கிறது. இந்நூல் 1985 ம் ஆண்டு வெளியிடப்படும் என்று தெரிகிறது.

---

## வீட்டுக் குறிப்புகள்

### காய் கறிகள்

1. காய் கறிகளை வாங்கிய வுடன் உபயோகிக்கவேண்டும்.

2. காய்கறிகளை நறுக்கியதும் தண்ணீரில் ஊறவைக்கக்கூடாது. இதனுல் வைட்டமின் சத்து குறை கிறது.

3. காய்கறிகளை அரியும் முன்பே கழுவவேண்டும்.

4. காய்களை பெரிய துண்டு களாக நறுக்குதல் நல்லது.

5. காய்களை அதிகமான நீரில் வேக வைக்கக்கூடாது.

6. வேக வைக்கும்போது பாத்திரத்தை மூடிவைக்க வேண் டும்.

7. காய்களை குறைந்த நேரம் வேக வைப்பதால் ஊட்டச் சத்து களைப் பாதுகாக்கலாம். நீரை முதலில் கொதிக்க வைத்துப் பிறகு கொதி நீரில் காய்களை வேக வைக்க வேண்டும்.

8. சமைக்கும்போது சோடா உப்பு சேர்க்கக்கூடாது. வைட்ட மின் 'பி' சத்து அழிந்துவிடும்.

9. ஒருமுறை சமைத்த காய் கறிகளை மறுபடியும் சூடாக்கினுல் உயிர்ச்சத்துக்கள் அழிகின்றன.

10. காய்கறிகளைச் சமைய லுக்குப் பயன்படுத்துவதற்குச் சற்று முன்புதான் தண்ணீரில் கழுவவேண்டும். நீண்டநேரம் நீரில் போட்டு வைத்தால் அதி லுள்ள தாது உப்புக்கள், வைட்ட மின் சத்துக்கள் அழிந்துவிடுகின் றன. சுவையும் குறைந்து போகின் றன.

11. காய்கறிகளைக் குளிர்ச்சி யான, ஈரப்பசையுள்ள இடத்தில் வைக்கவேண்டும்.

12. உருளைக் கிழங்கையும், வெங்காயத்தையும் வலைபோன்ற கூடைகளில் வைத்து ஈரம் படா மல் வைப்பது நல்லது.

13. வாழைக்காய் கெடாமல் சில நாட்கள் இருக்க தண்ணீரில் போட்டு வைக்கலாம்,

14. காலிஃபிளவரை சிறு துண்டுகளாக வெட்டி உப்புத் தண்ணீரில் சிறிது நேரம் போட்டு வைத்தால் அதில் புழுக்கள் இருந் தால் வந்துவிடும்.

15. கருவேப்பிலை இலையை வாயகன்ற பாட்டிலில் அல்லது பாத்திரத்தில் வைத்து நன்ருக மூடிவைத்தால் பல நாட்கள் கெடாமல் இருக்கும்,

16. உடைந்த தேங்காய் அழு காமல் இருக்க அதன் உட்புறம் லேசாக உப்பைத் தடவி வைக்க லாம்.

சிப்ஸ், அப்பளம், வடகம், வற்றல் போன்ற வறுவல்களை பொரித்தவுடன் மூடிவிடக் கூடாது. மூடினுல் சீக்கிரம் நமத்துவிடும். சிறிது நேரம் கழித்து மூடினுல் மொரமொரப் பாக இருக்கும்.

இஞ்சியையும், எலுமிச்சை பழத்தையும் ஈரமணலில் வைத் தால் காயாமல் இருக்கும்.

தொகுப்பு: ஜோய் ஆசீர்

பெண்கள் பகுதி:

## " விசுவாசித்தேன், ஆகையால் பேசுகிறேன்"

( சங். 116 : 10 )

( முற்றொடர்ச்சி )

**விசுவாசத்தால் வீட்டார் அனைவருடன் இரட்சிக்கப்பட்டனர்:**

ராகாப் தேவன் மேல் வைத்த விசுவாசம் பெரிதாய் இருந்தது. "எரிகோவை அழிக்க வரும் நாட்களில் என்மேலும் என் வீட்டார் மேலும் இரக்கமாயிருக்க வேண்டும்" என்று அவள் விண்ணப்பித்தபடியே, அவள் கட்டி வைத்த சிவப்புக் கயிற்றினை ஆதாரமாக வைத்து அவளும், அவளுடைய குடும்பத்தாரும் இரட்சிக்கப்பட்டனர்; தேவனுடைய ஜனங்களோடு சேர்த்துக் கொள்ளப்பட்டனர். எத்தனை ஒரு பாக்கியமான நிலை!

இன்று உனக்காகவும், உன் குடும்பத்திற்காகவும் சிவப்பான குருதியை வெள்ளமாகச் சிந்திய உன் நேசர் இயேசு ஆவலோடு உன்னையும் உன் குடும்பத்தையும் தம்முடைய மந்தையில் சேர்த்துக் கொள்ள அழைக்கிறார். நீ இதை உணருகிறாயா!

"கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி; அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" (அப். 16 : 31) என்ற வேதவாக்கு மாறாதது. உன் வீட்டாரைக் குறித்த பாரம் உனக்குண்டா? அவர்களுக்காக நீ கண்ணீர்விட்டு என்றைக்காவது ஜெபித்தது உண்டா? அப்படியானால் உன் வீட்டாரையும் கட்டாயம் இரட்சிப்பார்! கவலைப்படாதே!

ஒரு குடும்பத்தில் ஆண்டவர் ஒரு பிள்ளையைத் தமக்கென்று தெரிந்து கொண்டார். பக்தியுள்ள ஒரு கணவனை அவளுக்கு அருளினார். அவள் தன் கணவனுடன் இணைந்து ஆண்டவரை அதிகமாய் நேசித்தாள். ஆனால், அவளுடன் பிறந்த மற்ற சகோதர சகோதரிகளுக்கு இவளுடைய பக்தியான ஜீவியம் பைத்தியமான ஒரு ஜீவியமாகத் தோன்றியது. ( 1 கொரி. 1 : 18 ) அவர்களுடைய அன்பை இழக்க வேண்டிய நிலைமை இவளுக்கு ஏற்பட்டது. ஆரம்பத்தில் அது அவளுக்கு அதிக வேதனையைக் கொடுத்தது. ஆனால் கர்த்தரின் மேல் அவள் வைத்த அன்போ அதைக்காட்டிலும் மேலானதாய் இருந்த படியால், அந்த வேதனைகளை ஓரளவு மறக்கச் செய்தது. அந்த சகோதரி கர்த்தருக்குள் வளர்ந்து கொண்டே வந்தாள். தேவன் குடும்பமாக அவளைத் தம் உன்னத ஊழியத்தில் எடுத்து உபயோகிக்க ஆரம்பித்தார். மெல்ல மெல்ல, பக்தியின் வாழ்க்கையை அறிந்து கொள்ள முடியாத அவள் உறவினர் ஒவ்வொருவரையும், அவளுடைய இடைவிடாத ஜெபத்தைக் கேட்டு, ஆண்டவர் தன்வண்டை இழுத்துக் கொண்டார். எத்தனை மகிழ்ச்சி! சகோதரியே! நாம் நம்புகிற நம்முடைய தெய்வமாகிய இயேசு கிறிஸ்து, எல்லோரையும் இரட்சிக்கத் தம் இரத்தத்தைச் சிந்தினார். நம் வீட்டாருக்காக, நம் நண்பர்களுக்காக நம் விரோதிகளுக்காக, நம்மைச் சுற்றியிருக்கிற அனைவரின் இரட்சிப்பிற்காகவும் ஜெபிப்போம். ராகாபின் வேண்டுதலைக் கேட்டு அவளையும், அவள் குடும்பத்தையும் தன் ஜனங்களோடு சேர்த்துக் கொண்ட தேவன் உன்னையும் அவ்விதமே ஆசீர்வதிப்பார்.

இயேசு கிறிஸ்துவுடன் இணைந்து வாழும் வாழ்க்கை இன்பம் நிரம்பிய ஓர் வாழ்க்கை! அவர் பிரசன்னம் உங்களோடு என்றென்றும் நிலைத்திருந்தால் அதைப் போன்று விலையேறப் பெற்ற ஓர் பொக்கிஷம் வேறு ஒன்றும் இல்லை. தேவன் தாமே அவ்வித இன்பத்தை ராகாபைப் போல் இன்று துயரில் வாழும் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் அருளிச்செய்து ஆசீர்வாதமான நாட்களைக் கட்டளையிடுவாராக!

— சகோதரி தினகரன்.

# தெய்வத்தையும் மனித சமத்துவத்தையும் மதித்த பேராயர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க

( ஈழநாட்டில் வெளிவந்த இக் கட்டுரையை, உதயதாரகையின் வாசகர்களுக்காக நன்றியுடன் இங்கு தரப்படுகிறது — ஆ-ர். )

குருநாகல் பேராயர் அதிவந் லக்ஷ்மன் விக்கிரமசிங்கா அவர்கள் காலமாகிவிட்டார். என்ற செய்தியைக் கேட்டு அதிர்ச்சியுற்ற ஆயிரக் கணக்கானவர்களில் நானும் ஒருவன். அவரின் மறைவு அங்கிலிக்கன் திருச்சபைக்கு மட்டுமன்றி இந்த முழுத் தேசத்திற்கும் அளவிட முடியாத பேரிழப்பாகும். பேராயர் லக்ஷ்மன் விக்கிரமசிங்கா அமரத்துவமெய்தி இன்று ஒரு வருடமாகின்றது. இன்று அவர் எங்களுடன் உயிர்வாழா விட்டாலும் கூட அவரின் நினைவுகள் எங்களை விட்டு அகலக் கூடியனவல்ல. நெருக்கடியான காலங்களில் எழுகின்ற பிரச்சினைகளுக்கு எவ்வாறு முகம் கொடுக்கவேண்டும். அவைகளை எவ்வாறு அணுகவேண்டும் என்பன பற்றி அவர் நமக்குக் காட்டிய வழிகளின் ஒளியில் அவர் இன்றும் எங்கள் மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்.

1927 மார்ச் மாதம் 25ந் திகதி பிறந்த பிஷப் லக்ஷ்மன் அவர்கள் ஆரம்பக் கல்வியை றோயல் கல்லூரியில் பெற்றார். இவர் விளையாட்டுத் துறையில் முன்னணியில் திகழ்ந்ததுடன் தலைசிறந்த மாணவனாக விளங்கி பல்வேறு பரிசில்களைப் பெற்றார். பின்பு இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பொருளியியல் துறையிலும், அரசியல் விஞ்ஞானத் துறையிலும் முதலாந்தரச் சிறந்த பட்டதாரியாகி வெளியேறி ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் இலங்கை மாணவனாக உயர் கல்வி பெற்று பின்னர் மறைக் கல்வியை முடித்துக்கொண்டு இங்கிலாந்தில் மதகுருவாகத் திருநிலைப் படுத்தப் பட்டார். இலங்கைக்கு வந்து மட்டக்குளியில் உள்ள கதீட்ரல் தேவாலயத்தில் கடமையாற்றிய போது இவருக்கு கொட்டாஞ்சேனைப் பகுதியில் உள்ள ஏழை மக்களுக்குச் சேவை செய்யும் வாய்ப்புக் கிடைத்தது. அதன் பின்பு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தேசிய கிறிஸ்தவ சபைக் குருவாக இருந்தபோது பல்கலைக்கழக விருவுரையாளர்கள் மாணவர்களுடன் ஏற்படுத்திக்கொண்ட அறிவு பூர்வமான அதேவேளையில் அத்தியந்தமான தொடர்புகளின் விளைவாக கிறிஸ்தவ மாணவ இயக்கத்துடன் தன்னை மிகவும் இறுக்கமாக இணைத்துக்கொண்டதுடன் பலவிதமான முற்போக்குச் சிந்தனைகளையும் அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய கருத்துக்களை திருச்சபையிலும் சமுதாயத்திலும் எடுத்துக்கூறுபவராகவும் திருச்சபையின் உயர் மட்டத்தில் புதியதோர் மரபினை தோற்றுவித்த முன்னோடியாகவும் விளங்கினார்.

## குறைந்த வயதுப் பேராயர்

1962ல் தனது 35 ஆவது வயதில் குருநாகல் மாவட்டத்திற்கு பேராயராக திருநிலைப்படுத்தப் பட்டார். இவரைப் போல் மிகக் குறைந்த வயதில் பேராயர் பதவியை இன்னும் எவருமே வகிக்கவில்லை. இவர் பேராயராக இருந்த காலங்களில் தனது மறை மாவட்டத்தில் மாத்திரமன்றி வெளியிலும் தனிப்பட்ட தொடர்புகளையும், கிறிஸ்தவர்களிடையேயும், பிறரிடையேயும், தனது நண்பர்களுடம் ஏனையோர்களுடனும் ஏற்படுத்திக்கொண்டதுடன் தனிப்பட்ட முறையில் பல இடங்களுக்குச் சென்று பல விதமான சந்திப்புக்களையும் கலந்துரையாடல்களையும் ஏற்படுத்திய தன் பெறுபேறாகவே பேராயர் லக்ஷ்மன் அவர்கள் சமயத்திற்கும் தனது மறை மாவட்டத்திற்குப் அப்பால் ஆற்றிய தொண்டுகளே அவருடைய செல்வாக்கை மேலும் அதிகரிக்கச் செய்தன. இவர் கிறிஸ்தவ தொழிலாளர் என்ற ஸ்தாபனத்தில் ஆரம்ப உறுப்பினராகவும் இந் நிறுவனத்தை அவர் பெரிதும் ஈடுபாட்டுடன் வளர்த்தார்.

## மனித உரிமைகளில் அக்கறை

பேராயர் லக்ஷ்மன் அவர்கள் இந்நாட்டில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் செலுத்திய அக்கறையின் மூலம் இந்நாட்டு மக்கள் மத்தியில் தனக்கென ஓர் தனித்துவமான இடத்தைப் பெற்றுக்கொண்டார். 1976ல் மனித உரிமைகள் ஸ்தாபனத்தை (ஜனநாயக உரிமைகளை வென்றெடுப்பதற்கான ஸ்தாபனம்) உருவாக்குவதில் முன்னணி வகுத்த பேராயர் அவர்கள் 1978ல் அதன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதும் இந்த நாட்டில் மனித உரிமைகள் மீறப்பட்ட ஒவ்வோர் கட்டத்திலும் தனது எதிர்ப்பைத் தெரிவித்தும் அவற்றைப் பாதுகாப்பதற்கான போராட்டங்களை முன்னின்றும் நடத்தினார்.

வண. யோகான் தேவானந்தாவின் அரிய முயற்சியால் குருநாகலிலுள்ள இபகமுவவில் நிறுவப்பட்ட தேவசரணமய எனப்படும் ஆச்சிரமத்தின் வளர்ச்சிக்கும் அதன் சகல நடவடிக்கைகளுக்கும் பேராயர் லக்ஷ்மன் அவர்கள் ஆற்றிய பங்கு மிகவும் மகத்தானதாகும். இதன் ஆலோசனைக் கூட்டங்கள், விசேட நிகழ்ச்சிகள் யாவற்றிற்கும் தானே நேரில் வந்து பங்குபற்றி ஆலோசனைகள் கூற பேராயர் என்றுமே தவறுவதில்லை இங்கு நடந்த பல கருத்தரங்குகளிலும் கலந்துரையாடல்களிலும் பேராயர் லக்ஷ்மன் ஆற்றிய கருத்துரைகளால் கவரப்பட்டவர்களில் நானும் ஒருவன். தேவசரண நிலையத்தின் கூட்டங்களில் அடிக்கடி பங்குபற்றுவதன் மூலம். பேராயர் லக்ஷ்மன் அவர்களுடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொண்டேன். அங்கு இடம்பெற்ற பலவிதமான சமூக நடவடிக்கைகளாலும் சமயங்களுக்கிடையிலும் இனங்களுக்குமிடையிலுமான தொடர்ச்சியான கலந்துரையாடல்களின் பெறுபேறாக உருவானதுதான் விமுக்தி தர்மவேந்திர எனும் விடுதலைதரும் ஒன்றியம். இதில் பல பௌத்த இந்து கிறிஸ்தவ இஸ்லாமியத் தலைவர்களையும் குறிப்பாக பேராயர் லியோ நாணயக்கார; பேராசிரியர்கள் காலோ பொன்சேகா கைலாசபதி, சிவதம்பி போன்றோரையும், மற்றும் முற்போக்கு எண்ணம் கொண்ட பல பௌத்த பிக்குகளையும் ஒன்றிணைத்துப் பலவேறு கருத்தரங்குகளை நடத்தி நான்கு சமயங்களுக்கிடையே சமூக விடுதலைக்கான கருத்துக்களின் அடிப்படையில் இந் நாட்டு மக்களின் தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்கான ஓர் தீர்வுகாண முற்பட்டார். இத்தகைய கருத்தரங்குகளையும், கூட்டங்களை 1980- 1982- 1983ல் கொழும்பிலும் ஏனைய பாகங்களிலும் நடத்துவதற்கு முன்னின்று உதழைத்திருந்தார், (வளரும்)

## வீணை ஆசைகள்

லண்டனில் ஒரு சம்பவம் நடந்தது. தெருவில் ஏராளமான பன்றிகள் சென்றன. எல்லாரும் வேடிக்கைப் பார்த்தார்கள். எங்கே போகிறதென்று கவனித்து பார்த்தபோது, ஒருவர் பின்னாலேயே போய்க்கொண்டிருந்தன, அவர் ஒரு இடத்தில் போய், ஒரு வாசலைத் திறந்து கொண்டு உள்ளே போனார். பன்றிகளும் அவர் பின்னால் சென்றன. அது ஒரு கசாப்புக் கடை. எப்படி அவர் பின்னால் சென்றன என்று கேட்டதற்கு, 'ஐயா, என் கையில் இருக்கும் பையைப் பாருங்கள். இதில் நிறையமொச்சை இருக்கிறது. மொச்சை பன்றிகளுக்கு ரொம்பப் பிரியம். அவைகளில் சிலதை கீழே போட்டேன், அதை மோப்பம் பிடித்துக் கொண்டே எல்லாம் என் பின்னே வந்தன' என்றார்.

இப்படித்தான் சாத்தானும் நமக்கு ஆசை காட்டுகிறான். நமக்குப் பிரியமானவைகளைக் கண்டு அவன் பின்னே சென்று விடுகிறோம். சாத்தானுடைய வழி நம்மை கசாப்புக் கடைக்குத் தான்—அழிவுக்குத்தான் இட்டுச் செல்லும (நீதி. 16 : 25). சாத்தானை விட்டுவிட்டு தேவனைப் பின்பற்ற வேண்டும். பிசாசையும், நமகெட்ட ஆசைகளையும் நீக்க தேவனால் கூடும். விசுவாசத்தோடும், நம்பிக்கையோடும் கடவுளிடத்தில் இருந்தால சாத்தானுடைய பிடியிலிருந்து நம்மை மீட்க வல்லவராய் இருக்கிறார். அவராலே கூடாத காரியம் ஒன்றுமில்லை. (லூ. 1 : 37)

கேட்டு எழுதியவர்: ஜாய் ஆசீர்

## கிறிஸ்தவ வாழ்வு

( நவரத்தினம் தேவசொரூபன )

1, உலகினை வளமாக்கியுயிரினம் யாவும் படைத்து
நிலைகொளவைத்த தந்தை நீள்புகழ் பாடியேற்றி
விலகிடா மனத்தைக்கொண்டு வழுநழுமண் நன்னிலத்தில்
பலுகிடப்பெருகு மாப்போல் பரனுரை சேரவாழ்ந்து
நலமெலாந்துறந்தெம்மில் நலிந்தவாக்குதவி செய்து
பலமெலாம் மைந்தனென்ற பக்குவநிலையிற்புக்கு
கலமிது அழியுமென்ற கருத்தினை நிலை நிறுத்தி
நலமான மறுவருகை நம்பிக்கை கொண்டு நிற்பார்.

2. கையிலுள்ள செல்வமெல்லாங் கடவுளரீந்த தென்று
கணக்கிட்டுத்தசமபாகம் காணிக்கையாகவீந்து
வையத்தில் வாழ்வோர்க்கெல்லாம் வருதுன்பம தனதேயென்று
வருந்தியே செபித்தெங்கள் வள்ளலார் கவனமீர்ந்து
தண்ணாழி நடுவூர்நின்ற தருவினை ஒப்பாய் வாழ்ந்து
அண்ணலார் யேசுநாதர் அவரையே மூலைக்கல்லாய்
பொன்னகர் அயலார் சேரப் புதுவழி காட்டித்தாமும்
பன்னிரு சீசர்வாழ்ந்த பாதையில் செல்வர் நன்று.

EDITORIAL

## Christian Home Week

**( October 14 - 20 )**

"Unto us a child is *given*", is a fascinating, yet thought-provoking article we read some time ago in an issue of the *CCA News*.

Four out of five of the world's children have been, we already know, given to us in the developing countries. Our share of this gift in Sri Lanka can be deduced from our last Census of Population. Some 63 per cent (of our population of 14.8 million) is under 30 years of age and over 45 per cent, under 18.

A sign in a NY City Public School is said to have these words inscribed on it:— "*It is easier to build a boy than it is, to mend a man*".

There is little doubt that we in Sri Lanka have a population infrastructure with a great potential for the nation, a potential which few other nations can match.

But unfortunately recent happenings in our country which have been characterised as violence associated with 'a political crisis', have considerably reduced our potential, particularly in one part of the country, the North, where live 2.6 million indigenous Tamil citizens of Sri Lanka.

According to a statement made by National Security Minister Athulathmudali, (reported in the *Island* of 26 9-84) 50 youth were killed as terrorists in Jaffna during the April 1984 disturbances and 57 in the August disturbances. The number of casualties in between these disturbances, after these disturbances and before, is not reliably known.

We would not say that the South of the country has been free from the corrosive effects of violence. The deaths of security personell in the northern front would have had traumatic echoes in many homes in the South.

At any rate, it is a poignant feature of contemporary 'politics' in Sri Lanka that, in any part of the country, many of those who died in a confrontation and many of those who went on a spree of looting and arson after the confrontation were all touchingly young.

A news report in a national daily, during the dark days of July 1983 said that a police officer on duty in a scene of carnage in Colombo had 'lamented' that some of the "ruffians" who attacked houses were not more than *12 years of age*.

Such are the dimensions of the stage on which we have been called to observe *Christian Home Week* this year.

Adding a further sobering note is the *Call* from Amnesty International to observe the Week, October 15 to 20 (which synchronises with our Christian Home Week) as a "Prisoners of Conscience Week" *with special focus this year on* "*Women in Prison*".

To the Christian Church, this *Call* has a significant connotation. Almost in every country of the world, women constitute the backbone of the church at the local level and here in our Diocese it is the *Women's Fellowship* which organises annually the Christian Home Week culminating in the Christian Home Festival.

The urgency for us as a Christian Church, in the frontier of the *home* is, in the present grim context, to address the children "*where they are*" and the parents where they find themselves.

"Mission", says a contemporary Indian Theologian "certainly will not identify with any political movement but still less can it put itself at a safe distance in such a situation".

Dr D. T. Niles of revered memory, in his time, even posed the question if *some* political activists are not "in the frontiers of mission".

"Reconciliation is not feeling good or being desperate for something good" says a writer. It is such an attitude which Dietrich Bonhoeffer perhaps, had in mind when he coined the phrase "cheap grace".

The Christian Church would be failing in its duty to the nation if it does not at this hour use all its energy to persuade our youth to eschew violence. At the same time it should not create a tradition of becoming "frozen" by ignoring the problems of youth.

"I fear the church will be striving
for the safety of conformity
Though I hope it will scramble
for creative conflict in society
I fear the church will be content
to "tell it like they want to hear it"
Though I hope it will
"tell it like as it is".

[The lines are taken from *Christian News Service*, Hong Kong.]

*Jaffna College*

## Thanksgiving Memorial Service

Jaffna College, remembered *Mr. K. A. Selliah*, Principal of the College from 1947 — 1966 (the first national to succed a long line of missionaries) at a Thanksgiving Memorial Service held at the Cathedral Church, Vaddukoddai on Saturday, 6th of October 1984 which marked the first anniversary of his death [Mr Selliah was called to rest on 5-10-83].

The *thevaram* at the commencement of the Service was sung by Mrs. Jeeva Ratnasabapathy of the College Staff. Rev. S. Manopavan led the Call to Worship and Miss M. S. Elias, the Responsive Reading. The Bible Lessons were read by Dr. J. B Selliah and Miss S. S. Selvadurai. A specially composed Anthem in Tamil was rendered by the choir. Mrs. Shiranee Mills, of the Staff of Uduvil Girls' College rendered a Solo and Mr. Selliah's favourite hymn, "*Make me a captive Lord and then I shall be free*" was sung by the congregation. Mr. A R. Kadirgamar, Principal of the College, led the Litany of Thanksgiving.

The Rt. Rev. S. Kulandran preached the Sermon on the text "*Precious in the sight of the Lord is the death of the saints*".

The tributes at the Service were paid by Dr. (Mrs.) C Ambalavanar, an old student of Mr. Selliah and Mr. A. Rajasingam, the Vice-Principal of the College.

*Dr. (Mrs.) Ambalavanar* said in her tribute that she was privileged to be a product of the Bunker — Selliah era at Jaffna College which has now acquired a special aroma of its own. Mr. Selliah's outstanding virtue as an administrator was his continued efforts to make every student rise up to his or her maximum capacity. Whether it be in the class room, or in competitive sports or in extra curricular activities or public examinations he expected every student to do his best. The shaking of his head was a warning to the student that he had not come up to the heights to which his abilities qualified him.

Mr. Selliah's impact on a generation of students was so strong and abiding that on his death, he was the first Principal of the College to have been honoured with Memorial Services abroad, in London and Toronto.

Mrs. Selliah shared with her husband the heavy rigours of a life which entailed heavy commitments not only in the school but also in the Church, the community and in the Diocese. Besides looking after the home needs of her own children, Mrs. Selliah also drew to her home many of the under-privileged children of the area to whom too she was a mother.

In the third row of the right side of the Cathedral Church at Vaddukoddai was the seat which Mr. Selliah occupied week after week at the Sunday Morning services and the Vespers. It epitomised the steadfast faith which sustained Mr. Selliah in his work — a faith which made him set his sights on a life lived "in the earth but not of it".

*Mr. A. Rajasingam* in his tribute said that Mr Selliah's success as an administrator lay in the fact that apart from Jaffna College, there was no "world" for him. To him it was sacrilege to use his time and talents in any other service but for Jaffna College. Humble in spirit, unpatronising in his attitudes, keenly sensitive the needs of his students, staff and minor employees, his work at the College was marked by a 'commitment' and dedication which few could fail to acknowledge. His sense of identification with the local community made him take even firm decisions with ease. The teaching of Physics in the AL classes was to him as important and at times more important than his work in the office. He was accessible to any student who needed his help.

His humane qualities endeared him to the staff, students and the entire school community. He was kind and forgiving and his sense of justice always paramount in the decisions he took. Mundane traits of any kind did not soil his dealings with his employees.

After retirement he became a trusted steward of school funds and from 1977 to the date of his death he served the Jaffna College Board and the Diocese with a fervent zeal, hardly matched by any nationals associated with the Mission or the Diocese.

His love for Jaffna College and Vaddukoddai was so compelling that he sold all his properties and built his house at Vaddukoddai, where he lived and worked till the time of his death.

The Service concluded with the hymn *Thine is the Glory* and with Prayer and Benediction by Bishop Kulandran.

At the conclusion of the Service, the congregation repaired to the *Daniel Poor Memorial Library* where a photograph of Mr. Selliah was unveiled by the Rt Rev S Kulandran.

The members of the family entertained all those who attended the Service and the function at the College Library to a *Fellowship Tea* at Otley Hall.

*Registered as a Newspaper at the G.P.O., Sri Lanka under No. QB./59/300/26/82.*

Printed for the Jaffna Diocese of the Church of South India at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 19th October 1984 and published by Mr. Alvappillai Rajasingham, 330, Navalar Road, Jaffna.